DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.64/2024**

Deposition of witness for Prosecution அ.சா.7

| | | |
|---|---|---|
| பெயர் | : | சிவதாணு |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | ராமநாதன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 15.04.2026

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது தேவகோட்டை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.12.2022 ம் தேதி மாலை 4.15 மணியளவில் பணியில் இருந்தபோது 42 வயது மதிக்கத்தக்க சரவணன் என்ற நபர் அவரது மனைவியால் அழைத்து வரப்பட்டார். அவர் தன்னை இனம்தெரிந்த 1 நபர் அன்றைய தினம் மாலை 3.15 மணியளவில் அவரது வீட்டில் வைத்து அருவாளால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு வெட்டுக்காயம் வலது பக்க உச்சி மண்டையில் 4X1X எலும்பு ஆழத்திற்கும் மற்றும் 3X1X எலும்பு ஆழத்திற்கு ஒரு காயமும், 2 வது காயம் வலது பக்க பின் மண்டையில் வெட்டுக்காயம் 5X1X எலும்பு ஆழத்திற்கு இருந்தது. அவரை உள்நோயளியாக அனுமதித்து அவருக்கு சிகிச்சை

அளிக்கப்பட்டது. அவருக்கு மேல் சிகிச்சைக்காக 23.12.2022 ம் தேதி சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கிருந்து வந்த காயச்சான்றிதழை சான்றாக வைத்து அவருக்கு 30.12.2022 ம் தேதி சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டார் என்றும் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றும் சான்றிதழ் வழங்கினேன். (**மேற்படி காயச்சான்றிதழ் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

காயம்பட்ட நபர் எந்த ஒரு நபரின் பெயரையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணையில் காயம்பட்டவர் எந்த நபரின் பெயரையோ, உறவு முறையோ குறிப்பிட்டு சொன்னதாக சொல்லவில்லை என்றால் சரிதான். காயம்பட்டவர் மது அருந்தி தடுமாறி குண்டுங்குழியுமான சாலையிலோ பீங்கானிலோ விழும்போது மேற்படி காயங்கள் ஏற்படலாம் என்றால் வேகமாக சென்று பீங்கான் பதித்து இருக்கும் சுவரின்மேல் உருண்டு விழுந்தால் ஏற்பட வாய்ப்புண்டு.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d.D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.